# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில் துறைக்கான ஆளுமைவிருத்தி செயல்திட்டம்

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில் துறையைச் சேர்ந்த 20 பேர் கொண்ட பேராளர்கள் விசேட பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி செயல் திட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக 2025 டிசம்பர் 1 முதல் 20 ஆம் திகதி வரை இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில் துறையில் இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் அதனை மெருகேற்றுதல் போன்ற பணிகளைச் செய்யும் துறை சார்ந்த பிரதிநிதிகளே இந்த பேராளர்கள் குழுவில் உள்ளடங்கியிருந்தனர்.

2. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது மேற்கொள்ளப்பட்டிருந்த அறிவித்தலுக்கு அமைவாக இந்த நிகழ்ச்சி திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு, தற்போது நடைமுறையில் உள்ள இருதரப்பு ஆளுமை விருத்தி ஒத்துழைப்பு நிகழ்ச்சி திட்டங்களின் ஓர் அங்கமாக வருடாந்தம் 700 விசேட பயிற்சி ஆசனங்களை ஒதுக்குவதற்கு இந்தியா உறுதியளித்திருந்தது.

3. இந்த பயிற்சித் திட்டமானது, இந்திய அரசாங்கத்தினால் ராஜஸ்தான் ஜெய்ப்பூரில் உள்ள இரத்தினக்கல் மற்றும் நகை தொழில்துறைக்கான இந்திய நிறுவனத்தில் 20 நாட்கள் நடத்தப்பட்டிருந்தது. இந்த அமர்வுகளின் போது இரத்தினக்கல் மற்றும் நகை தொழில் துறை சார்ந்த தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகள் மற்றும் அத்துறை சார்ந்த விரிவான அமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. சுத்தமாக்கல் மற்றும் வெட்டுதலுக்கான ஆரம்பப் பணிகள். வடிவமைப்பு, வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல், தர பரிசோதனைகள் மற்றும் ஏனைய துறை சார்ந்த நடைமுறைகள் தொடர்பான விடயங்கள் இந்த பயிற்சியில் உள்வாங்கப்பட்டிருந்தன. அத்துடன் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி திறன்களை மேம்படுத்தல் மற்றும் நடைமுறை திறன்களை வலுவாக்குதல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறை ரீதியான சந்திப்புகளும் இதன் போது ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

4. அனுபவ ரீதியான கற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் அங்கமாக இப்பயிற்சிகளில் கலந்து கொண்டிருந்தோர், முன்னணி இரத்தினக் கல் உற்பத்தி நிறுவனங்களுக்கான விஜயங்களை மேற்கொண்டு, இதன் மூலம் இந்தியாவின் இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில் துறை கட்டமைப்பிற்குள் சமகால உற்பத்தி தொழில்நுட்பம், வடிவமைப்பு,

அபிவிருத்தி நடைமுறைகள் மற்றும் நவீன சில்லறை வர்த்தக செயற்பாடுகள் ஆகியவை தொடர்பாக நேரடியான அனுபவங்களை பெற்றுக் கொண்டிருந்தனர்.

5. இந்த விசேட பயிற்சித் திட்டமானது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே இரத்தினக்கல் மற்றும் நகைத் துறையில் தொழில்முறை திறன்களை அர்த்தமுள்ள வகையில் வலுப்படுத்தும் அதேவேளை, அறிவு பகிர்வினை ஊக்குவிக்கின்றது. அத்துடன் துறை சார்ந்த நிர்வாக மற்றும் கைத்தொழில் ரீதியான தொடர்புகளையும் மேம்படுத்துகின்றது. இவ்வாறான செயல்திட்டங்கள், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் ஆளுமை விருத்தி செயல்திட்டங்கள் ஆகியவற்றை நோக்கிய இரு நாடுகளினதும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கின்றன.

**************

**கொழும்பு**
**26 டிசம்பர் 2025**